IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.151/2020

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | VAJIRAVEL |
| FATHER'S NAME | : | CHINNASAMY |
| VILLAGE | : | ANUPPU |
| OCCUPATION | : | COOLIE |
| AGE | : | 62 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 5th day of November 2024.

**<u>சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.</u>**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் அனுப்பு கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 21.06.2019 ம் தேதி மாலை 04.00 மணிக்கு எனது மகன் காந்தி குடியாத்ததில் இருந்து வீட்டிற்கு இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தபோது சால்வாபட்டியில் லாரி மோதி விபத்து ஏற்பட்டது. நான் சம்பவ இடத்தில் வந்து பார்த்து எனது மகனை 108 ஆம்புலன்ஸ் மூலம் குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மேல் சிகிச்சைகாக அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றோம். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் இறந்துவிட்டதாக தெரிவித்தனர். நான் இது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் அளித்தேன்.அந்த புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

விபத்து பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. பொது நபர்கள் தகவல் சொல்லிதான் எனக்கு தெரியும். பெருமாள் என்பவரின் நிலத்தின் அருகே விபத்து நடந்தது. சம்பவத்தின்போது எனது மகன் 12 ஆம் வகுப்பு படித்துகொண்டிருந்தான். அவருக்கு அப்போது வயது 17 வருடங்கள் 10 மாதங்கள் ஆகும்.

நான் சம்பவ இடத்திற்கு செல்லாமல் நேரடியாக மருத்துவமனைக்கு தான் சென்றேன் என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்தியதாக சொல்லும் வண்டியில் பதிவெண் எனக்கு தெரியாது. புகார் மனுவில் பொது நபர் எழுதிகொடுத்தார். அதில் நான் கையொப்பம் செய்தேன். நான் இழப்பீடு தொகை பெறுவதற்காக எதிரிதான் விபத்தை ஏற்படுத்தினார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எனது மகனின் கவனகுறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் அதை மறைக்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகன் சம்பவ

சமயத்தில் இளவர் என்பதால் அவர் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு சட்டபடி அனுமதி இல்லை என்பதால் அவர்தான் விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல.

போலிசார் என்னிடம் வெள்ளைதாளில் கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. சம்பவத்திற்கு 1 வாரம் பின்னிட்டு போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். சம்பவம் நடந்தவிதம் தெரியாமல் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**ஓம்/-ஜோ.ஜெய்கணேஷ்,**

குற்றவியல் நீதித்துறை நடுவர்(FAC),

குடியாத்தம்.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.151/2020

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | GOVINDHARAJ |
| FATHER'S NAME | : | RAMASAMY |
| VILLAGE | : | SALAIYORAPATTI |
| OCCUPATION | : | MILK VENDOR |
| AGE | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the $5^{th}$ day of November 2024.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் சாலையோரபட்டி கிராமத்தில் குடியிருந்து பால் வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 21.06.2019 ம் தேதி மாலை 04.00 மணிக்கு நான் பரதராமியில் இருந்து குடியாத்தம் நோக்கி வந்துகொண்டிருந்தபோது சாலையோரபட்டியில் எனக்கு முன்னால் சென்றுகொண்டிருந்த லாரி எதிரில் வந்த இருசக்கர வாகனத்தை மோதி விபத்து ஏற்படுத்தியது. அருகில் சென்று பார்த்தபோது அந்தவிபத்தில் அடிபட்டவர் எனது உறவினரான காந்தி என்று தெரியவந்தது. ஆம்புலன்ஸிற்கு போன் தகவல் தெரிவித்து குடியாத்தம் அரசு மருத்தவமனைக்கு அனுப்பி வைத்தோம். ஆஜர் எதிரிதான் இந்த விபத்தை ஏற்படுத்தியவர். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்து நடந்த மறுநாள் போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். போலிசார் மறுநாள் என்னை சம்பவ இடத்தில் வைத்து விசாரணை செய்தார்களா என்றால் ஆமாம். நான் போலிசார் விசாரணையில் போலிசார் என்னை சம்பவ இடத்தில் விசாரணை செய்தாரகள் சொன்னேே என்றால் சரிதான்.

20 மீட்டர் இடைவெளியில் நான் லாரிக்கு பின்னால் சென்றுகொண்டிருந்தேன். எதன் அடிப்படையில் லாரி வேகமாக சென்றது என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் ரோட்டில் லாரி சென்றதை பார்த்ததால் கூறுகிறேன். நான் லாரி வேகமாக சென்றதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் இருசக்கர வாகனத்தில் வந்தவர் தான் வேகமாக வந்து விபத்து ஏற்படுத்தினார் என்றாலும் சரியல்ல.

விபத்தானது வளைவான பகுதியில் ஏற்பட்டுள்ளதால் பின்னால் வந்த என்னால் யாருடைய அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டதையும் சொல்ல இயலாது என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை இறந்தது எனது உறவினர் என்பதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

நான் லாரியின் பின்னால் வந்நதால் முன்னால் சம்பவம் எனக்கு தெரிந்திருக்காது என்றாலும், வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. லாரி சரியான பாதையில் சென்றுகொண்டிருந்தது என்றாலும் இறந்த நபர் தான் அஜாகிரதையாக வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்றாலும் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் நஷ்டஈடு பெற்று தறுவதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் விபத்து சம்பவத்தை பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

**ஒம்/-ஜோ.ஜெய்கணேஷ்,**
குற்றவியல் நீதித்துறை நடுவர்(FAC),
குடியாத்தம்.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.151/2020

DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | MOHAN |
| FATHER'S NAME | : | ANNAMALAI |
| VILLAGE | : | K. MOTTUR |
| OCCUPATION | : | ELECTRICIAN |
| AGE | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 5th day of November 2024.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் கே.மோட்டூர் கிராமத்தில் குடியிருந்து எலக்ட்ரிசியனாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.06.2019 ம் தேதி மாலை 04.00 மணியளவில் சாலையோரப்பட்டியில் எனது வீட்டில் இருந்து 100 மீட்டர் தூரத்தில் விபத்து நடந்த சத்தம் கேட்டு சென்று பார்த்தபோது அங்கு காந்தி என்பவருக்கு இடுப்பு மற்றும் வயிற்றில் காயம் ஏற்பட்டிருந்தது. அந்த விபத்து லாரி மோதி நடந்ததாக தெரிந்து கொண்டேன். விபத்தை ஏற்படுத்திய லாரி சம்பவ இடத்தில் நின்றுகொண்டிருந்தது. பிறகு ஆம்புலன்ஸ் வரவழைத்து மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கபட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் தான் போலிசார் விசாரணையிலும் சொல்லி இருந்தேன் என்றால் சரிதான். போலிசார் விசாரித்தபோது எனக்கு சம்பவ தேதி தெரியும் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த தினம் என்ன கிழமை என்றால் வெள்ளிக்கிழமை நடந்தது. சம்பவ சமயத்தில் நான் வீட்டில் இருந்தேன் என்றாலும் தகவல் தெரிந்து சம்பவம் வந்து பார்த்தேன் என்றால் சரிதான். சம்பவத்ததை நேரடியாக பார்க்கவில்லை என்பதால் யாருடைய கவனகுறைவால் விபத்து நடந்தது என்பது எனக்கு தெரியாது.

ஒம்/—ஜோ.ஜெய்கணேஷ்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்(FAC),
குடியாத்தம்.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.151/2020

DEPOSITION OF WITNESS P.W.4

| | | |
|---|---|---|
| NAME | : | PICHANDI |
| FATHER'S NAME | : | GANESAN |
| VILLAGE | : | ANUPPU |
| OCCUPATION | : | MASON |
| AGE | : | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 5th day of November 2024.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் அனுப்பு கிராமத்தில் குடியிருந்து மேஸ்திரியாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.06.2019 ம் தேதி நான் வேலையில் இருந்தபோது எனது அக்கா மகன் காந்திக்கு சாலையோரப்பட்டியில் விபத்து ஏற்பட்டதாக தகவல் தெரிவித்தனர். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்து ஆம்புலன்ஸ் வரவழைத்து மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவ சமயத்தில் நான் பரதராமியில் வேலை செய்து கொண்டிருந்தேன் என்றால் சரிதான். அ.சா.2 எனக்கு போன் மூலம் தகவல் கூறினார். நான் விபத்தினை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எனவே யாருடைய கவனகுறைவால் விபத்து ஏற்பட்டது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இறந்த நபர் எனது உறவினர் என்பதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**ஓம்/-ஜோ.ஜெய்கணேஷ்,**
குற்றவியல் நீதித்துறை நடுவர்(FAC),
குடியாத்தம்.